ஊடக அறிக்கை

தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477423 +94 11 2346257
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| வெளியிடுபவர் | புள்ளிவிபரத் திணைக்களம் |
|---|---|
| திகதி | 2022.12.29 |

# மாகாண ரீதியான மொத்த உள்நாட்டு உற்பத்தி (மா.மொ.உ.உ)[1] - 2021

## பொருளாதாரத்தின் பாரிய பங்கினை மேல் மாகாணம் வகைகூறியதுடன் அதனைத்தொடர்ந்து வட மேல் மற்றும் மத்திய மாகாணங்கள் காணப்பட்டன.

**முக்கிய அம்சங்கள்**

*பெயரளவிலான மொ.உ.உற்பத்தி – 2021 (அடிப்படை ஆண்டு 2015)*
*ரூ.17,686 பில்.*

*மா.மொ.உ.உற்பத்தி பங்குகள்:*

1ஆவது மேல் மாகாணம் **(42.6%)**
2ஆவது வட மேல் மாகாணம் **(11.1%)**
3ஆவது மத்திய மாகாணம் **(10.1%)**

இலங்கையின் பெருமளவிலான முக்கிய நடவடிக்கைகளின் மையப்பகுதியாக விளங்குகின்ற மேல் மாகாணம், ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் அதன் பங்கில் சிறிதளவிலான அதிகரிப்பொன்றுடன் 2021இல் பெயரளவிலான மொ.உ.உற்பத்தியின் (அடிப்படை ஆண்டு 2015) 42.6 சதவீதத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்தி தேசிய வெளியீட்டிற்கு தொடர்ந்தும் பாரியளவில் பங்களித்துள்ளது. வடமேல் (11.1 சதவீதம்) மற்றும் மத்திய (10.1 சதவீதம்) மாகாணங்கள் முறையே இரண்டாம் மற்றும் மூன்றாம் அதிகூடிய பங்குகளை பதிவுசெய்தன.

மேல், சப்பிரகமுவ மற்றும் வட மத்திய மாகாணங்களிலிருந்து பெயரளவிலான மொ.உ.உற்பத்திக்கு கிடைத்த பங்களிப்பு, 2020ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2021இல் அதிகரித்த அதேவேளை, தென், வடக்கு மற்றும் ஊவா மாகாணங்களின் பங்களிப்பு மாற்றமின்றிக் காணப்பட்டன. எனினும், மத்திய, கிழக்கு மற்றும் வட மத்திய மாகாணங்களிலிருந்து கிடைத்த பங்களிப்புக்கள் 2021இல் சிறிதளவு குறைவடைந்தன.

வரைபடம் 1
மா.மொ.உ.உற்பத்தியின் பங்குகள் (%)




அட்டவணை 1
மாகாண ரீதியான பெயரளவிலான மொ.உ.உற்பத்தி (அடிப்படை ஆண்டு 2015)

| மாகாணம் | 2020(அ) | | 2021(அ) | |
|---|---|---|---|---|
| | பெறுமதி (ரூ.பில்.) | பங்கு (%) | பெறுமதி (ரூ.பில்.) | பங்கு (%) |
| மேல் | 6,688 | 42.2 | 7,541 | 42.6 |
| வட மேல் | 1,734 | 10.9 | 1,956 | 11.1 |
| மத்திய | 1,673 | 10.6 | 1,787 | 10.1 |
| தென் | 1,441 | 9.1 | 1,604 | 9.1 |
| சப்பிரகமுவ | 1,087 | 6.9 | 1,287 | 7.3 |
| கிழக்கு | 929 | 5.9 | 975 | 5.5 |
| ஊவா | 829 | 5.2 | 922 | 5.2 |
| வட மத்திய | 796 | 5.0 | 875 | 4.9 |
| வடக்கு | 663 | 4.2 | 740 | 4.2 |
| **இலங்கை** | **15,840** | **100.0** | **17,686** | **100.0** |

## பொருளாதார நடவடிக்கைகளுக்கான மாகாண ரீதியான பங்களிப்பு

பொருளாதார நடவடிக்கைகளுக்கான மாகாண ரீதியான பங்களிப்பு நியதிகளில், வேளாண்மை நடவடிக்கைகளுக்கு வட மேல் மாகாணம், 17.6 சதவீதம் கொண்ட பங்குடன் அதிகூடிய பங்களிப்பினைப் பதிவுசெய்து அதனைத்தொடர்ந்து தென் (14.3 சதவீதம்) மற்றும் மத்திய (13.0 சதவீதம்) மாகாணங்கள் காணப்பட்டன.

2021 காலப்பகுதியில் கைத்தொழில் நடவடிக்கைகளில் அதிகூடிய பங்கினை 48.2 சதவீதம் கொண்ட பங்களிப்புடன் மேல் மாகாணம் தொடர்ந்தும் பெற்றுக்கொண்டது. வட மேல் (11.5 சதவீதம்) மற்றும் மத்திய (9.5 சதவீதம்) மாகாணங்கள் ஒட்டுமொத்த கைத்தொழில் நடவடிக்கைகளுக்கு இரண்டாம் மற்றும் மூன்றாம் அதிகூடிய பங்களிப்புக்களை வழங்கின.

பணிகள் நடவடிக்கைகள் நோக்கில், மேல் மாகாணம் 44.7 சதவீதம் கொண்ட பங்குடன் அதிகூடியளவு பங்களித்து அதனைத்தொடர்ந்து மத்திய (10.0 சதவீதம்), வட மேல் (9.8 சதவீதம்) மற்றும் தென் (9.8 சதவீதம்) மாகாணங்கள் பங்களித்தன.

வரைபடம் 2
மாகாணங்களின் நடவடிக்கை ரீதியான செயலாற்றம் (%) - 2021




அட்டவணை 2
மா.மொ.உ.உற்பத்தியின் துறைவாரியான உள்ளமைப்பு
2020 மற்றும் 2021

| மாகாணம் | வேளாண்மை (%) | | கைத்தொழில் (%) | | பணிகள் (%) | |
|---|---|---|---|---|---|---|
| | **2020** | **2021** | **2020** | **2021** | **2020** | **2021** |
| மேல் | 10.6 | 10.2 | 47.4 | 48.2 | 44.2 | 44.7 |
| மத்திய | 12.3 | 13.0 | 9.9 | 9.5 | 10.7 | 10.0 |
| தென் | 13.9 | 14.3 | 6.5 | 6.3 | 9.7 | 9.8 |
| வடக்கு | 7.8 | 7.0 | 3.8 | 3.9 | 3.9 | 3.9 |
| கிழக்கு | 9.3 | 9.5 | 6.6 | 5.7 | 5.0 | 4.8 |
| வட மேல் | 18.6 | 17.6 | 11.2 | 11.5 | 9.7 | 9.8 |
| வட மத்திய | 10.7 | 11.3 | 3.4 | 3.2 | 5.0 | 4.9 |
| ஊவா | 8.8 | 9.3 | 4.7 | 4.6 | 5.0 | 4.9 |
| சப்பிரகமுவ | 8.0 | 7.7 | 6.5 | 7.2 | 6.9 | 7.3 |
| **இலங்கை** | **100.0** | **100.0** | **100.0** | **100.0** | **100.0** | **100.0** |

[1] மாகாண ரீதியான மொ.உ.உற்பத்தியானது 2015 அடிப்படை ஆண்டின் கீழ் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் தொகுக்கப்படும் பெயரளவிலான மொத்த உள்நாட்டு உற்பத்தியினை கூறுகளாக வேறுபடுத்துவதன் மூலம் மேலிருந்து கீழ் அணுகுமுறையொன்றினைப் பயன்படுத்தி இலங்கை மத்திய வங்கியின் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் கணிக்கப்பட்டு வருகின்றது. மாகாணங்களுக்கான மாகாண ரீதியான மொ.உ.உற்பத்தியினை மதிப்பிடுகையில் மொ.உ.உற்பத்தியில் ஒவ்வொரு துறை விடயத்தினதும் பெறுமதியானது மாகாண மட்டத்தில் தொடர்புடைய குறிகாட்டிகளைப் பயன்படுத்தி பங்கீடு செய்யப்பட்டது.

## மாகாணங்களுக்குள்ளான பொருளாதார நடவடிக்கைகள்

2021இல் பணிகள் நடவடிக்கைகள், வடமேல் (48.6 சதவீதம்), கிழக்கு (48.0 சதவீதம்) தவிர, ஒவ்வொரு மாகாணத்தினதும் மொ.உ.உற்பத்தியின் 50 சதவீதத்திற்கு மேல் பாரியளவில் பங்காற்றியுள்ளன என்பதனை மாகாணங்களுக்குள்ளான பொருளாதார நடவடிக்கைகளின் உள்ளமைப்பு எடுத்துக்காட்டுகின்றது. கைத்தொழில் நடவடிக்கைகளில் பாரியளவிலான செறிவு மேல் மாகாணத்தில் (33.7 சதவீதம்) அவதானிக்கப்பட்டு, அதனைத்தொடர்ந்து வடமேல் (31.1 சதவீதம்), கிழக்கு (30.6 சதவீதம்) மாகாணங்கள் விளங்கின. வேளாண்மை நடவடிக்கை நியதிகளில், ஆண்டுகாலப்பகுதியில் வட மத்திய மாகாணத்தில் (19.9 சதவீதம்) அதிகூடிய செறிவு காணப்பட்டதுடன் மேல் மாகாணத்தில் (2.1 சதவீதம்) ஆகக் குறைந்த செறிவு காணப்பட்டது.

**அட்டவணை 3**
**மாகாணங்களுக்குள்ளான பொருளாதார நடவடிக்கைகள் - 2021**

